|b09291 54malmpF (English)

|c09291_000_54malmp.xml (Task 178438)

|v1

ஞாயிறு மதியக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிறு மதியக் கூட்டம்

|v4

அக்டோபர் 3, 2010

|v5

உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல்

|v6

சமாதானம்

|v7

பொது மாநாடு

|v8

உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல்

|v9

மூப்பர் பெர் ஜி. மால்ம்

|v10

எழுபதின்மர்

|v11

*நமது ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலென்பது கிறிஸ்துவின் கோட்பாட்டைக் கற்றுக்கொள்ளுதல் மற்றும் பின்பற்றுவதின் பலனாக வரக்கூடிய மனசு மற்றும் இருதயத்திற்கான சமாதானமும் அதில் அடங்கியிருக்கிறது.*

|v12

*ஸ்வீடனின் கோதென்பர்க் என்ற நகரத்தில் இரு பக்கமும் முதிர்ந்த மரங்கள் நிறைந்த ஒரு அழகிய சாலை இருந்தது. பெரிய மரங்கள் ஒன்றின் அடிப்பாகத்தில் ஒரு ஓட்டை இருந்ததை ஒரு நாள் நான் பார்த்தேன், ஆகவே மிக ஆர்வத்துடன் அதனுள்ளே நான் எட்டிப் பார்த்துபோது அந்த மரம் முழுவதுமாக ஓட்டையாயிருந்ததை நான் பார்த்தேன். ஓட்டையாயிருந்ததா, ஆம், ஆனால் காலியாயில்லை! அது முழுவதும் எல்லா வகையான குப்பைகளால் நிறைந்திருந்தது.*

|v13

*அந்த மரம் இன்னமும் நின்றுகொண்டிருந்தது எனக்கு வியப்பளித்தது. ஆகவே நான் மேலே பார்த்து, ஒரு அகன்ற இரும்புப் பட்டை அந்த மரத்தின் மேல்பகுதியைச் சுற்றி கட்டப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அந்த பட்டையுடன் அநேக இரும்புச் சங்கிலிகள் கட்டப்பட்டு அவைகள் பக்கத்து கட்டடங்களில் இணைக்கப்பட்டிருந்தன. தூரத்திலிருந்து பார்க்கும்போது மற்ற மரங்களைப் போலவே அது தெரிந்தது, பக்கத்தில் போய்ப் பார்க்கும்போதுதான் பலமான அடி மரத்திற்குப் பதிலாக அது ஓட்டையாயிருந்ததை ஒருவர் கண்டுபிடிக்க முடியும். அநேக ஆண்டுகளுக்கு முன்பே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ ஒன்று அதன் அடிப்பாகத்தை பலவீனப்படுத்த ஆரம்பித்துவிட்டது. ஒரே நாளில் அது நடந்துவிடவில்லை. எப்படியாயினும், காலியான மரத்தைப் போல் அல்லாமல் சிறிது சிறிதாக ஒரு செடி ஒரு பெரிய மரமாக வளர்வதைப் போலவே பலமாகவும் உள்ளேயிருந்து நிறைக்கப்படவும் நாமும் நமது திறமையில் சிறிது சிறிதாக வளரலாம்.*

|v14

*இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியின் குணமாக்குதல் மூலமாகவே உயர்ந்து நிற்கவும் பலமாக இருக்கவும் நாம் பெலனுடையவர்களாக இருக்கிறோம், ஒளியால், புரிந்துகொள்ளுதலால், சந்தோஷத்தால், அன்பால் நமது ஆத்துமாக்கள் நிறைக்கப்படலாம். “அவர்கள் அனைவரும் தம்மிடம் வரும்படியாகவும், தன் நன்மையைப் புசிக்கும்படியாகவும் அழைக்கிறார். தம்மிடம் வரும் ஒருவரையும் அவர் தடைபண்ணுவதில்லை” என்பது அவரது அழைப்பு (2 நெப்பி 26:33).*

|v15

*“வருத்தப்பட்டுப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிட*
*த்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.*

|v16

*“நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்*
*மேல் ஏற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்*
*பாறுதல் கிடைக்கும்” என்பது அவரது வாக்குத்தத்தம் (மத்தேயு **11:28--29**).*

|v17

*இந்த இளைப்பாறுதலைப்பற்றி ஜோசப் எப். ஸ்மித் சொன்னார்: “தேவனைப் பற்றிய அறிவிலும் அன்பிலும் பிரவேசித்தலும், நாம் செய்வது சரி என்றும் நாம் வேறு எதற்காகவோ தேடிப்போகவில்லை என்றும் ஒவ்வொரு கோட்பாட்டினால் அல்லது ஏமாற்றக் காத்திருக்கிற மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவானவற்றில் அலைகிறவர்களாயிராத அளவுக்கு அவரது நோக்கத்திலும் அவரது திட்டத்திலும் விசுவாசம் வைத்திருத்தல் என்பது அதற்கு அர்த்தம் என மனதிற்குத் தெரிகிறது. அது தேவனிடமிருந்த வந்த கோட்பாடு என நாம் அறிவோம், அதைப்பற்றி யாரிடமும் நாம் எந்த கேள்வியையும் கேட்பதில்லை; அவர்களின் எண்ணங்களை, கருத்துக்களை, அவர்களின் நிச்சயமற்ற சிந்தனைகளைக் கூற அவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். தேவனில் விசுவாசத்தின் அந்த எல்லையை அடைந்த ஒரு மனிதனுக்கு எல்லா சந்தேகங்களும் பயமும் அவனைவிட்டு வெளியேறுகிறது, அவன் ‘தேவனின் இளைப்பாறுதலில்’ பிரவேசிக்கிறான்”* (*Teachings of Presidents of the Church: Joseph F. Smith* [1998], 56).

|v18

*கிறிஸ்துவின் கோட்பாட்டைக் கற்றுக்கொள்ளுதலினாலும் பின்பற்றுவதாலும், பிறருக்கு சேவை செய்வதிலும் உதவுவதிலும் கிறிஸ்துவின் கரங்களாக மாறுவதாலும் விளைகிற நமது ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைப்பதில் மனசமாதானமும் இருதய சமாதானமும் சேர்ந்திருக்கிறது. இயேசு கிறிஸ்துவில் விசுவாசமும் அவரது போதனைகளைப் பின்பற்றுதலும் நமக்கு ஒரு உறுதியான நம்பிக்கையைக் கொடுத்து, இந்த நம்பிக்கை நமது ஆத்துமாக்களுக்கு ஒரு நங்கூரமாகிறது. நாம் திடமாகவும் அசைக்கப்பட முடியாதவர்களாகவும் ஆகலாம். நிலையான உள் சமாதானம் நமக்குக் கிடைத்து, கர்த்தரின் இளைப்பாறுதலில் நாம் பிரவேசிக்கலாம். ஒளியிலிருந்தும் சத்தியத்திலிருந்தும் நாம் விலகிப் போனால் மட்டுமே, மரத்தின் வெற்றிடத்தைப்போன்ற ஒரு காலியான உணர்வு வந்து நமது ஆத்துமாக்களின் உள் பாகங்களை நிறைத்துவிடுகிறது, அந்த வெற்றிடத்தை மதிப்பில்லாத காரியங்களால் நிறைக்க நாம் முயற்சிப்போம்.*

|v19

*பூமிக்கு வருவதற்கும் இவ்வாழ்க்கைக்கு பின்பு வரும் அநித்திய வாழ்விற்கும் முன்பு ஆவிக்குழந்தைகளாக நாம் இருந்ததைக் கருத்தில் கொள்ளும்போது, இ*

ந்த பூலோக வாழ்க்கை உண்மையிலேயே ஒரு மிகச் சிறிய கணநேரமே.

|v20

எப்படியாயினும் இந்த நாள் ஒரு சோதனையின் நாள், ஆனால் நமது சோதனைக் காலத்தை வீணாக்காமலிருக்க அழைக்கப்படுவதைப் பின்பற்ற நாம் தீர்மானிக்கும்போது அது வாய்ப்புகளின் நாளாகவும் இருக்கிறது (2 நெப்பி 9:27 பார்க்கவும்). நமது மனங்களில் வாழும் சிந்தனைகள், நமது இருதயங்களில் வளரும் உணர்வுகள், நாம் தீர்மானிக்கும் செயல்கள் எல்லாமுமே இப்போதும் இதற்குப் பிறகும்  நமது வாழ்க்கையில் ஒரு தீர்மானிக்கும் விளைவை ஏற்படுத்துகிறது.

|v21

நாம் திட்டமிட்டு செய்கிற காரியங்களுக்கான ஒரு நித்திய கண்ணோட்டத்தை பேணிக்காக்கும் பொருட்டு, நமது தினசரி குறிக்கோளை உயர்த்த, குறிப்பாக நமது “இன்றைய தற்போதுள்ளவற்றை” நாம் தேடவேண்டுமென நமக்குத் தெரிந்தவற்றைச் செய்ய “நாளைய வருங்காலம்” ஒன்றிற்காக காத்திருக்கும் ஒரு எண்ணத்தை நாம் கண்டுபிடித்தால், அது ஒரு உதவக்கூடிய பழக்கமாயிருக்கிறது.

|v22

நமது பாதையில் நமது தீர்மானங்களில் பரிசுத்த ஆவியின் தாங்கும் செல்வாக்கால் நாம் உதவப்படுகிறோம். இப்போது, நமக்குள்ள ஒளிக்கும் புரிந்துகொள்ளுதலுக்கும் எதிராக நாம் தீர்மானித்தால், ஒரு மோசமான மனஉணர்வை நாம்  அனுபவிப்போம், அது நன்றாக உணர வைக்காது. ஆனால், உடனடியாக இது மனந்திரும்புவதற்கான நேரமென நமக்கு நினைப்பூட்டுவதால் அந்த ஒரு மோசமான மன உணர்வு ஒரு ஆசீர்வாதமாக இருக்கிறது. நாம் தாழ்மையாயிருந்து சரியானதைச் செய்ய விரும்பும்போது, நமது பாதைகளை மாற்ற சரியாக  செயல்பட நாம் ஆர்வமுள்ளவர்களாயிருப்போம். கர்வமுள்ளவர்களாயிருந்து “தங்களுக்கு தாங்களே விதிகளை ஏற்படுத்திக்கொண்டவர்கள்” (கோ.உ 88:35), மனந்திரும்புதலின் ஆவி அவர்கள் இருதயங்களில் பிரவேசிக்கும்மட்டும், “தம் வலிய கயிற்றால் என்றென்றைக்கும் அவர்களை அவன் கட்டிப்போடும்வரைக்கும், அவர்களை கழுத்துடன் கூடிய சணல் கயிற்றால்” சாத்தான் நடத்த அனுமதிக்கிறார்கள் (2 நெப்பி 26:22). சமாதானம் தேவனிடமிருந்து வருகிற வரமாயிருப்பதாலும், அது பரிசுத்த ஆவியின் மூலமாக மட்டுமே வருவதாலும் துன்மார்க்கத்தின் தாக்கங்களைப் பின்பற்றுவது எப்போதுமே சமாதானத்தின் உணர்வைக் கொண்டுவராது. “துன்மார்க்கமானது எப்போதும் மகிழ்ச்சியாயிருந்ததில்லை” (ஆல்மா 41:10).

|v23

நமது அன்றாட செயல்களில் அற்பமும் சொற்பமுமான காரியங்களே ஒரு நீடித்த பாதிப்பை ஏற்படுத்துகின்றன (ஆல்மா 37:6--7 பார்க்கவும்). நாம் என்ன சொல்கிறோம், நாம் எவ்வாறு நடக்கிறோம், செய்வதற்கு நாம் எவ்வாறு தீர்

மானிக்கிறோம் என்பது நம்மை மட்டுமே பாதிப்பதில்லை நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் பாதிக்கின்றன. நாம் கட்டலாம் அல்லது நாம் அழித்தும்போடலாம். எனது பாட்டியைப்பற்றிக் கூறப்பட்ட ஒரு கதை ஒரு எளிய ஊக்குவிக்கும் எடுத்துக்காட்டாகும். முட்டைகள் வாங்குவதற்காக தனது சிறுபிள்ளைகளில் ஒருவனை அவள் அனுப்பினாள். நம்பிக்கையான அந்த குழந்தை சாலை வழியாக மகிழ்ச்சியாக நடந்து வந்துகொண்டிருந்தது, ஆனால் குழந்தை வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது முட்டைகளில் பல உடைந்துபோயிருந்தன. குடும்ப நண்பர் ஒருவர் அங்கிருந்தார். மிக மோசமாக நடந்துகொண்டதற்காக குழந்தையைக் கண்டிக்கும்படி எனது பாட்டியை எச்சரித்தார். பதிலாக, "விடு, மீண்டும் முட்டைகள் முழுமையாவதில்லை. உடைந்தவற்றை நாம் பயன்படுத்தி சில பலகாரங்களைச் செய்து ஒன்றாக சாப்பிடுவோம்" என மிக அமைதியாகவும் புத்திசாலித்தனமாகவும் பாட்டி சொன்னார்.

|v24

ஒரு புத்திசாலித்தனமான, உந்தப்பட்ட வழியில் அற்பமும் சொற்பமுமான அன்றாட காரியங்களைக் கையாள நாம் கற்றுக்கொள்ளும்போது நமது ஆத்துமாக்களில் ஒரு நிச்சயமான மன இசைவை பலப்படுத்துகிறதாய் அதன் பலனிருந்து, நம்மைச் சுற்றியுள்ளவர்களை சேர்த்து பலப்படுத்துகிறது. நன்மை செய்ய நம்மை அழைக்கிற எல்லாமுமே "கிறிஸ்துவினுடைய வல்லமையாலும், ஈவினாலும் அனுப்பப்பட்டவை; ஆகையால் அது தேவனாலானது என்று நீங்கள் பூரண ஞானத்தோடு அறிந்து கொள்ளலாம்" (மரோனி 7:16).

|v25

இப்போது, நாம் உங்களுக்குக் கூறிய காலியான மரம் இப்போது அங்கில்லை. அந்த வெற்றிடத்தில் சில வாலிபர்கள் பட்டாசுகளை கொளுத்திப்போட்டு மரம் தீப்பிடிக்கக் காரணமாயிருந்தது. அதைக் காப்பாற்ற முடியாமல் அதைக் கீழே தள்ளவேண்டியதாயிற்று. சிறியதோ பெரியதோ உள்ளிருந்து அழிக்கக்கூடிய காரியங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்! அது ஒரு பயங்கரமான பாதிப்பை ஏற்படுத்தி ஆவிக்குரிய மரணத்திற்கு காரணமாயிருக்கும்.

|v26

அதற்குப் பதிலாக நீடித்திருக்கிற ஒரு சமாதான மனதையும் இருதயத்தையும் தாங்குகிற அந்த காரியங்களில் நாம் கவனம் செலுத்துவோம். பின்னர் நமது "தன்னம்பிக்கை தேவனின் பிரசன்னத்தில் பலமாக வளரும்" (கோ.உ 121:45). கர்த்தரின் இளைப்பாறுதலில் பிரவேசிக்க, சமாதானத்தின் வரத்தைப்பெற வாக்குத்தத்தம் ஒரு தற்காலிக, உலகப்பிரகாரமான திருப்தியிலிருந்து வெகு தூரத்திலிருக்கிறது. இது உண்மையில் பரலோகத்தின் ஒரு வரம்: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27). ஆத்துமாவை குணப்படுத்தும் பலப்படுத்தும் வல்லமை அவரிடமிருக்கிறது. அவர் இயேசு கிறிஸ்து, அவரில், இயேசு கிறிஸ்துவின் நாமத்

*தில் நான் சாட்சியளிக்கிறேன், ஆமென்.*

|v27

*லியஹோனா*

|v28

*நவம்பர் 2010*